# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 29 வியாழக்கிழமை 14.08.2025 கதிர் 285



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு-
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு இன்று

## உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு











முல்லைத்தீவு, ஓக. 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம், இடைக்கட்டுப் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகத்தில் தலைமைத்துவப் பயிற்சிக்காக வருகை தந்திருந்த மாணவச் செல்வங்கள் மீது ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் உயிரிழந்த 54 மாணவிகளினதும் 7 பணியாளர்களினதும் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வள்ளிபுனம் - இடைக்கட்டுச் சந்தியில் அமைக்கப்பட்ட நினைவிடத்தில் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

7

## சுன்னாகத்தில் களவாடப்பட்ட நகைகளுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 14

சுன்னாகத்தில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் மற்றும் கைத்தொலைபேசிகளுடன், பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால்

7




## செஞ்சோலை வளாகத்தில் அஞ்சலி

முல்லைத்தீவு, ஓக. 14

செஞ்சோலை வளாகத்தில் ஸ்ரீலங்கா இராணுவ விமானப் படையின் வான் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களின் நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது.

முல்லைத்தீவு - வள்ளிபுனம், இடைக்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் பயிற்சிக்காகச் சென்றிருந்த மாணவர்கள் மீது இலங்கை விமானப் படை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பாடசாலை மாணவர்கள்

7



## யாழ். பல்கலையில் செஞ்சோலைப் படுகொலையின் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஓக. 14

செஞ்சோலைப் படுகொலையின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கொல்லப்பட்டவர்களின் உருவப் படங்களுக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் இருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி விமானப் படையினர் மேற்கொண்ட விமானக்

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இலங்கையின் மனித உரிமை தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் நிலைப்பாடு




கொழும்பு, ஓக 14

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமைகளில் கடுமையான சிக்கல்கள் இருப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள நாடுகளில் மனித உரிமைகள் நடைமுறைகள் குறித்த 2024 அறிக்கையை வெளியிடும் போது, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு அவர்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கு இலங்கை அரசாங்கம் மிகக் குறைந்த முயற்சிகளையே மேற்கொண்டுள்ளதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

தனிநபர்கள் மீதான துப்பாக்கிச் சூடு, விளக்கமறியலில் இருக்கும்போது கொலைகள், ஊடகவியலாளர்களை துன்புறுத்துதல் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் குறித்து அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தனது அறிக்கையில் கவலை தெரிவித்துள்ளது.

2022 போராட்டத்திற்குப் பிறகு நடைபெற்ற தேர்தல்களில் மகத்தான வெற்றியைப் பெற்று ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக மிகக் குறைந்த நடவடிக்கையே எடுத்துள்ளதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தி கைது செய்தல், பெண்கள் கட்டாய கருத்தடைக்கு உட்படுத்தப்படுவது தொடர்பிலும் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் 103 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், பொலிஸ் காவலில் வைத்து 7 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும், அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2024 ஆம் ஆண்டில் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலான எந்தவொரு சம்பவங்களும் பதிவாகவில்லை என்றும், போரில் பாதிக்கப்பட்டவர்களின் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய கடற்றொழிலாளர்களின் தொடர் கைதுகள்



கொழும்பு, ஓக 14

ஒரு கோடி 20 இலட்சம் மக்களுக்கு சொந்தமான கடல் பரப்பில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடுவதன் காரணமாகவே இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்படுகின்றார்கள் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் காணி உறுதி வழங்க நிகழ்வின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், “நாங்கள் கடலுக்குச் சென்று எப்பொழுது கடலுக்கு வருவார்கள். அவர்களை கொண்டு வந்து சிறையில் அடைப்போம் என்று எதிர்பார்ப்பதில்லை.

இலங்கை கடல் பரப்புக்குள் கடற்றொழிலில் ஈடுபட வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்களை நாங்கள் கைது செய்து சிறை வைக்கவில்லை.

அவர்கள் இலங்கையினுடைய எல்லைக்குள் வருவதனால் தான் இது இலங்கையினுடைய சட்டத்துக்கு அமைவாக கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள்.

தொப்புள் கொடி உறவுகள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற வடக்கு கிழக்கிலே வாழுகின்ற கடற்றொழிலாளர்களின் ஜீவனாயத்தினை முற்றும் முழுதாக அளிக்கும் முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இதன் காரணமாகவே இலங்கை கடல் பரப்புக்குள் அத்துமீரி கடற்றொழிலில் ஈடுபடுகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்படுகின்றார்கள்.

இந்திய கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்ததாக இலங்கை கடற்றொழிலாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு இன்றுவரையில் எந்த முடிவும் எட்டப்படாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு எந்த விமர்சனமும் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. இவ்வாறான ஒரு நிலையில் இந்திய கடற்றொழிலாளர்களது போராட்டமானது நியாயமற்றது” என குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# வசந்த சமரசிங்கவை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும்



கொழும்பு, ஓக 14

அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறியதற்காக அமைச்சர் வசந்த சமரசிங்கவை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுப்ரீம்செட் பற்றிப் பேசுவதன் மூலம் அமைச்சர் வசந்த சமரசிங்க பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு சவால் விடுத்துள்ளார் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், "வெளியே பேசுவதற்குப் பதிலாக அமைச்சர் இந்த விடயத்தை அரசாங்கத்திற்குள் விவாதித்து, பிரதமரின் கருத்துகள் குறித்து தனது ஆட்சேபனைகளை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

இன்று அமைச்சர்கள் நடந்து கொள்வது போல் அமைச்சரவை அமைச்சர்கள் ஒருபோதும் நடந்து கொள்ளவில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு அமைச்சரவை அமைச்சர் பிரதமருக்கு சவால் விடுவது இதுவே முதல் தடவை" என்று அவர் கூறினார்.

அத்துடன், "எனது தந்தை, மறைந்த அமைச்சர் காமினி திசாநாயக்க மற்றும் மறைந்த அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் ஆகியோர் 1980ஆம் ஆண்டு மறைந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடிமை உரிமைகளை ஒழிக்கும் ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கத்தின் நடவடிக்கையை எதிர்த்தனர்.

அமைச்சரவைக்குள் இந்த நடவடிக்கை குறித்து அவர்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். இருப்பினும், இன்று நடந்ததைப் போல அவர்கள் பொதுவில் எதையும் கூறவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தூங்கா நகரமாக மாற்றப்படவுள்ள கண்டி



கொழும்பு, ஓக 14

கண்டி நகரத்தை இரவிலும் செயல்படும் நகரமாக மாற்றி, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க ஒரு சிறப்புத் திட்டம் இந்த மாதம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டியில் உள்ள முக்கிய ஹோட்டல்கள், பிற வணிக நிறுவனங்கள், கலாசார மையங்கள், விளையாட்டு போன்ற பல கூறுகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், கண்டியில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இரவில் தக்க வைத்துக் கொள்வதாகும் என கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் கண்டியில் உள்ள தலதா வீதி மற்றும் கொட்டுகொடெல்ல வீதியில் கட்டப்பட்ட தற்காலிக கடைகளில் வணிக நிறுவனங்கள் கடைகளை நடத்த அனுமதிக்கும், மேலும் அந்த கடைகள் முதல் இரண்டு வாரங்கள் இலவசமாக வழங்கப்படும்.

மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன் தெரிவிக்கையில், மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம், மத்திய மாகாண சபை மற்றும் கண்டி மாநகர சபை உட்பட கண்டியில் உள்ள அனைத்து வர்த்தக சங்கங்களின் பங்கேற்புடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், இந்த திட்டத்திற்கு இணையாக, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகளின் சிறப்பு பேருந்து சேவையும் நள்ளிரவு 12.00 மணி வரை இயங்கும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

**(kandy breeze night)** என்ற பெயரில் இந்த திட்டம் ஒவ்வொரு வார இறுதியிலும் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான பிரேரணைக்கு மொட்டுக் கட்சி ஆதரவு

கொழும்பு, ஓக 14

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் பற்றி கிடைத்த புலனாய்வுத் தகவல்களை மேசையில் பத்திரப்படுத்தி வைத்து பொறுப்பை மீறியவர்கள் இந்த அரசில் உயர் பதவிகளில் உள்ளார்கள். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் முழுமையான அரசியலாகிவிட்டது.

குண்டுத்தாக்குதல்கள் பற்றிப் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற போது கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டார்.

இவர் தனது பதவிக்கான பொறுப்பில் இருந்து விலகியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றச்சாட்டுக்குள்ளானவரை பதவியில் வைத்துக்கொண்டு எவ்வாறு சுயாதீனமான முறையில் விசாரணைகள் இடம்பெறும் என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகின்றது.

ஆகவே, இவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கிடைத்த புலனாய்வுத் தகவல்களைக் கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் அவற்றை அலுவலக மேடையில் பத்திரப்படுத்தி வைத்தவர்கள் இந்த அரசில் உயர் பதவிகளில் உள்ளார்கள்.

அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வவுனியாவில் யானை தாக்கி இருவர் படுகாயம்



கொழும்பு, ஓக 14

வவுனியா கனகராயன்குளம், விஞ்ஞானகுளம் பிரதான பாதையில் இரு தினங்களில் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி இருவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவமானது நேற்று (13) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கனகராயன்குளத்தில் உள்ள கடையில் வீட்டுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு விஞ்ஞானகுளத்தில் உள்ள தனது வீடு நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த தே.நிஷாந்தன் என்ற 32 வயது இளைஞனே கனகராயன்குளம் பாலத்துக்கு அருகில் பிரதான வீதியில் வைத்து யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இதன் போது தலையில் காயம் அடைந்த அவர் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன் தினமும் (12) குறித்த பகுதியில் வயோதிபர் ஒருவர் குறித்த வீதியால் சென்றபோது யானை தாக்கி படுகாயம் அடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு திலித் ஜயவீர எதிர்ப்பு



கொழும்பு, ஓக 14

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வர திட்டமிட்டுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை தான் எதிர்ப்பதாக சர்வஜன அதிகாரத்தின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

தனது நிலைப்பாட்டை விளக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர, இந்தப் பிரேரணை தற்போதைய பிரதி அமைச்சரை விட, இலங்கை இராணுவத்தின் முன்னாள் கிழக்கு கட்டளை தளபதியையே குறிவைப்பதாகக் கூறினார்.

நாட்டின் பாதுகாப்புப் படைகள் மீது பழி சுமத்தும் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக தானும் தனது கட்சியும் இந்தப் பிரேரணையைப் பார்ப்பதாக அவர் மேலும் கூறினார்.

எதிர்க்கட்சிகள் நேற்று சபாநாயகரிடம் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பித்துள்ள நிலையில் அவரது இந்த கருத்துகள் வெளியாகியுள்ளன.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் அருண ஜயசேகரவின் தொடர்பு மற்றும் நலன் மோதல் குறித்து கடுமையான கவலைகளை மேற்கோள் காட்டி, எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பிக்க முடிவு செய்தது.

உயிர்த்த தாக்குதல்களுடன் தொடர்புடைய முக்கிய சம்பவங்களில், வவுணத்தீவு காவல்துறை கொலைகள் மற்றும் சாய்ந்தமருது குண்டுவெடிப்பு உள்ளிட்ட முக்கிய சம்பவங்களின் போது, கிழக்கு மாகாண கட்டளை தளபதியாக ஜயசேகரவின் பங்கு குறித்து இந்தப் பிரேரணை எச்சரிக்கையை எழுப்புகிறது. (ஐ)

# தொடர் விடுமுறை காரணமாக சென்னையில் உள்நாட்டு விமான கட்டணங்கள் பல மடங்கு அதிகரிப்பு



தொடர் விடுமுறை காரணமாக சென்னையில் உள்நாட்டு விமான கட்டணங்கள் பல மடங்கு அதிகரித்துள்ளது. பயணிகள் கூட்டத்தால் மதுரை, தூத்துக்குடி, திருச்சி, கோவை, சேலம் விமானங்களில் கட்டணம் பலமடங்கு உயர்ந்துள்ளது.

சென்னையில் இருந்து மதுரைக்கு சாதாரண நாட்களில் கட்டணம் ரூ.4,000 ஆக இருக்கும் நிலையில் தற்போது கட்டணம் ரூ.16,769 வரை உயர்ந்துள்ளது. தூத்துக்குடிக்கு செல்வதற்கு ரூ.3,843 ஆக இருந்த விமான கட்டணம் ரூ.21,867-ஆக உயர்ந்துள்ளது. திருச்சிக்கு செல்ல சாதாரண நாட்களில் ரூ.1,827ஆக இருந்த விமான கட்டணம் ரூ.14,518ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து கோவை செல்ல சாதாரண நாட்களில் விமான கட்டணம் ரூ.3,818 இன்றைய கட்டணம் ரூ.15,546 -ஆக உயர்ந்துள்ளது.

சென்னையில் இருந்து சேலம் செல்ல சாதாரண நாட்களில் விமான கட்டணம் ரூ.3,398 ஆக உள்ள நிலையில் இன்றைய கட்டணம் ரூ.7,613 ஆக உள்ளது. இவ்வாறாக உள்நாட்டு விமான கட்டணம் பல மடங்கு அதிகரித்துள்ளதால் பயணிகள் அதிர்ச்சியடைந்துள்ளது. (ஐ)

## சிந்து நதி நீரை நிறுத்தினால் இந்தியாவுக்கு உரிய பாடம் கற்பிக்கப்படும்: பாக். பிரதமர்



சிந்து நதி நீரை நிறுத்தினால் இந்தியாவுக்கு உரிய பாடம் கற்பிக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மிரட்டி உள்ளார். காஷ்மீர் பஹல்காமில் நடந்த தாக்குதலை தொடர்ந்து பதிலடியாக இந்தியா சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்துள்ளது. இதனால் தண்ணீர் இல்லாமல் பாகிஸ்தான் அவதிப்பட்டு வருகிறது. எனவே சிந்து நதி ஒப்பந்தம் அடிப்படையில் தண்ணீர் வழங்கும்படி பாக். ராணுவ தளபதி அசிம் முனீர், பாக். அதிபர் சர்தாரியின் மகன் பிலாவல் பூட்டோ உள்ளிட்டோர் இந்தியாவுக்கு மிரட்டல் விடுத்தனர்.

அந்த வரிசையில் பாக்.பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பும் இந்தியாவுக்கு பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளார். சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு இஸ்லாமாபாத்தில் நடந்த ஒரு விழாவில் ஷெபாஸ் ஷெரீப் பேசியதாவது: சிந்து நதி நீர் ஒப்பந்தம் பாகிஸ்தானின் உயிர்நாடி. மேலும் சர்வதேச ஒப்பந்தங்களின் கீழ் பாகிஸ்தானின் உரிமைகளில் எந்த சமரசமும் செய்து கொள்ள முடியாது. சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை மீண்டும் இந்தியா செயல்படுத்த வேண்டும்.

எங்கள் தண்ணீரை நீங்கள் பிடித்துக் கொள்வதாக அச்சுறுத்தினால், பாகிஸ்தானுக்கு உரிய ஒரு சொட்டு தண்ணீரை கூட நீங்கள் பறிக்க முடியாது என்பதை மனதில் கொள்ளுங்கள் என்று எதிரியிடம் சொல்ல விரும்புகிறேன். எங்கள் தண்ணீரை நிறுத்துவதாக நீங்கள் மிரட்டுகிறீர்கள். நீங்கள் அத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டால், பாகிஸ்தான் உங்களுக்கு ஒருபோதும் மறக்க முடியாத அளவுக்கு பாடம் கற்பிக்கும். இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அதிமுக மாஜி எம்.பி. மைத்ரேயன் திமுகவில் இணைந்தார்



அதிமுக முன்னாள் எம்.பி. மைத்ரேயன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். ஒரு மாதத்திற்குள் அதிமுகவில் இருந்து 2 முன்னாள் எம்பிக்கள் வெளியேறி திமுகவில் இணைந்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சென்னையை சேர்ந்த பிரபல மருத்துவரான மைத்ரேயன், கடந்த 1991ம் ஆண்டு பாஜவில் இணைந்து தனது அரசியல் வாழ்க்கையை தொடங்கினார். இதையடுத்து 1999ம் ஆண்டு பாஜவிலிருந்து விலகிய மைத்ரேயன், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தலைமையை ஏற்று அதிமுகவில் இணைந்தார். மைத்ரேயன், ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராக அறியப்பட்டவர். தொடர்ச்சியாக 3 முறை எம்.பி.யாக இருந்தார்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர், அதிமுக பிளவுபட்டபோது, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் ஆதரவாளராக இருந்தார். ஓபிஎஸ் அணியில் இருந்து, இபிஎஸ் அணியுடன் மோதல் போக்கைக் கடைபிடித்த நிலையில், அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். இதை தொடர்ந்து, கடந்த ஆண்டு பாஜவில் இணைந்த மைத்ரேயன், அக்கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில், அவர் மீண்டும் அதிமுகவில் இணைந்தார். நேற்று காலை வரை அதிமுகவின் அமைப்புச் செயலாளராக பதவி வகித்து வந்த சூழலில், நேற்று காலை 10.30 மணியளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தனது ஆதரவாளர்களுடன் திமுகவில் இணைந்தார்.

முன்னதாக பாஜவுடன் அதிமுக கூட்டணி அமைத்ததால் அதிருப்தி அடைந்ததாக தெரிவித்த அன்வர் ராஜா, அக்கட்சியில் இருந்து விலகி, கடந்த ஜூலை 21ம் தேதி திமுகவில் இணைந்தார். அதேபோல அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏ கார்த்திக் வி.ஆர்.தொண்டைமான், அண்மையில் திமுகவில் இணைந்தார். இதற்கிடையே, அதிமுகவில் இருந்து விலகி திமுகவில் இணைந்த அன்வர் ராஜாவுக்கு மாநில அளவிலான முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது மற்றொரு முன்னாள் எம்பியும் திமுகவில் இணைந்திருப்பது அதிமுகவிற்கு பின்னடைவாக உள்ளது.

இதற்கிடையில், மைத்ரேயன் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டு மக்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பக்கபலமாக இருக்கிறார்கள். அதிமுகவின் போக்கு சரி இல்லை. டெல்லியின் கட்டளைக்கு அடிபணிந்த இயக்கமாக அதிமுக இன்றைக்கு மாறிவிட்டது.

கூட்டணி முடிவுகளை கூட பழனிசாமியால் எடுக்க முடியாத நிலையில் இருக்கிறார். காசு கொடுத்து கூட்டிவரப்பட்ட கூட்டத்தை கண்டு, தன்னை ஒரு எம்.ஜி.ஆர் போலவும், அம்மையார் ஜெயலலிதா போலவும் நினைத்துக்கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. இதற்கு ஒரே ஒரு உதாரணம், உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது. 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவின் வெற்றி இப்போதே உறுதியாகிவிட்டது. "மண், மொழி, மானம் காக்க ஓரணியில் திரண்டு இருக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மைத்ரேயன் நீக்கம்: எடப்பாடி அறிவிப்பு

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி வெளியிட்ட அறிக்கை: அதிமுகவின் கொள்கை-குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும் கட்சியின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்துகொண்டதாலும் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில், கட்டுப்பாட்டை மீறி களங்கமும் அவப் பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், அமைப்புச் செயலாளர் மைத்ரேயன், இன்று முதல் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார். அதிமுகவினர் யாரும் இவருடன் எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என கேட்டுக்கொள்கிறேன். (ஐ)

## 17ஆம் திகதி பீகாரில் வாக்கு அதிகார யாத்திரை தொடக்கம் ராகுல், இந்தியா கூட்டணி தலைவர்கள் பங்கேற்பு

வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் வாக்குகள் திருட்டுக்கு எதிராக வரும் 17ம் தேதி பீகாரில் வாக்கு அதிகார யாத்திரை தொடங்குகிறது. காங்கிரஸ் பொது செயலாளர் வேணுகோபால் எக்ஸ் தளத்தில் நேற்று பதிவிட்டுள்ளதாவது: மிக பயங்கரமான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு எதிரான மக்கள் இயக்கம் வரும் 17ம் தேதி பீகாரில் உள்ள சசாராமில் தொடங்குகிறது.

இதில் ராகுல் காந்தி, ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி உள்ளிட்ட இந்தியா கூட்டணி தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். மாநிலம் முழுவதும் நடத்தப்படும் யாத்திரை வரும் செப்டம்பர் 1ம் தேதி பாட்னாவில் நிறைவடையும். இதில் இந்தியா கூட்டணி தலைவர்கள் கலந்து கொள்வார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் அமைப்பின (என்எஸ்யுஐ) பொறுப்பாளர் கன்னையா குமார், "சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று மாவட்ட தலைநகரங்களில் பேரணி நடத்தப்படும். வரும் 22ம் தேதி முதல் செப்டம்பர் 7ம் தேதி வரை வாக்கு திருடர்களே பதவிகளை ராஜினாமா செய்யுங்கள் என வலியுறுத்தி அனைத்து மாநில தலைநகரங்களில் பேரணி நடத்தப்படும். அதை தொடர்ந்து கையெழுத்து இயக்கம் நடத்தப்படும்" என்றார். (ஐ)



# ராமன் எத்தனை ராமனடி!



சைடோக்ரோம்சி என்கிற நொதிப்பொருளைக் கண்டறிந்தவர். கருவுற்ற பழங்குடியினப் பெண்கள் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்ட குழந்தைகளின் நல்வாழ்வுக்கு உதவும் உணவுப் பொருட்களைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டவர். தனது ஆராய்ச்சிக்காகக் குடியரசுத் தலைவர் விருது பெற்றவர். இத்தனைக்கும் மேலாக கமலா சொஹொனிக்கு ஒரு முக்கியமான பெருமை உண்டு. இந்தியாவில் அறிவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்மணி இவர்தான். ஆனால், அறிவியல் ஆராய்ச்சிக்குள் நுழைவதற்கு அவர் பெரும்பாடுபட வேண்டியிருந்தது.

உயிர்வேதியியல் துறையில் பட்டம் பெற்ற சொஹொனி, ஆராய்ச்சிக்காக இந்திய தேசிய அறிவியல் கழகத்துக்கு விண்ணப்பத்தைச் சமர்பித்தார். ஆனால், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. நிராகரித்தவர் அறிவியல் கழகத்தின் அப்போதைய இயக்குநரும் நோபல் பரிசு பெற்ற முன்னணி விஞ்ஞானியுமான சர்.சி.வி ராமன். விண்ணப்பத்தை நிராகரிக்க அவர் சொன்ன காரணம், “அறிவியல் கழகத்தில் நான் பெண்களைத் தேர்ந்தெடுக்கப்போவதில்லை, பெண்களால் அறிவியல் ஆராய்ச்சியில் சிறப்பாகப் பங்களிக்க முடியாது.”

கமலா சொஹொனி மனம் தளரவில்லை. சர்.சி.வி. ராமனின் அலுவலகத்துக்கு முன்னால் அகிம்சை முறையில் சத்தியாகிரகப் போராட்டத்தை நடத்தினார். ஒரு கட்டத்துக்கு மேல் ராமனால் அதை உதாசீனப்படுத்த முடியவில்லை, அதிகாரபூர்வமாக அவரது விண்ணப்பத்தை நிராகரிக்க வேறு காரணமும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆகவே பல்வேறு நிபந்தனைகளோடு, “இது தற்காலிகமான தேர்வுதான், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்கு நீங்கள் கவனிக்கப்படுவீர்கள், அதில் தேறினால் மட்டுமே தொடர்ந்து ஆராய்ச்சி செய்யலாம்” என்பது போன்ற ஒரு சூழலில் கமலாவை ஆராய்ச்சி செய்ய அனுமதித்தார். கமலா அறிவியல் கழகத்துக்குள் நுழைந்தார். இந்த நிகழ்வு இந்திய அறிவியல் கழகத்திற்குள் பெண்கள் வருவதற்கான கதவைத் திறந்துவிட்டது.

இது நடந்து பல ஆண்டுகள் கழித்து இந்தியப் பெண் அறிவியலாளர்கள் கூட்டமைப்பின் விழாவில் பேசும்போது கமலா இவ்வாறு கூறினார்:

“ராமன் ஒரு சிறந்த விஞ்ஞானியாக இருந்தாலும் அவரது பார்வை குறுகியதாக இருந்தது. நான் பெண் என்பதாலேயே அவர் என்னை நடத்திய விதத்தை ஒருபோதும் மறக்கவே முடியாது. அது எனக்கு ஒரு பெரிய அவமானம். அந்தக் காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு மிகவும் அதிகமாக இருந்தது. நோபல் பரிசு பெற்ற ஒருவரே இப்படி நடந்துகொள்ளும்போது நாம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?” என்று வேதனையுடன் பேசினார்.

கமலா சொஹொனியைத் தேர்ந்தெடுக்க முடியாது என்று மறுத்த சர்.சி.வி ராமனைப் போல எத்தனையோ பேர் பெண் விஞ்ஞானிகளைத் தேர்வு செய்வதிலும் அவர்களுக்கான வாய்ப்புகளை வழங்குவதிலும் பாகுபாடு காட்டியிருக்கிறார்கள். இப்போதும் அந்தப் பாகுபாடு பல இடங்களில் இருக்கிறது. “இயற்பியல் என்பது ஆண்களால் உருவாக்கப்பட்டது. ஆண்களால் கட்டமைக்கப்பட்டது. பெண் விஞ்ஞானிகளைவிட ஆண் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் மேம்பட்டவையாக இருக்கின்றன” என்று 2019ஆம் ஆண்டில் ஒரு நிகழ்ச்சியில் பேசினார் பிரபல இயற்பியலாளர் அலசாண்ட்ரோ ஸ்ட்ரூமியா. “உயிரியல்ரீதியாகப் பெண்கள் ஆண்களிடமிருந்து வேறுபட்டவர்கள். தொழில்நுட்பத்துறைகளில் அவ்வளவாகப் பெண்கள் இல்லாததற்கு இந்த வேற்றுமைதான் காரணம்” என்று கூகுள் நிறுவனத்தின் மென்பொருள் வல்லுநர் ஒருவர் கூறியிருக்கிறார்.

2005 இல் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் தலைவர் லாரன்ஸ் சம்மர்ஸிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. “அறிவியல் மற்றும் பொறியியலின் உயர் பதவிகளில் பெண்கள் ஏன் அவ்வளவாக இல்லை?” என்று கேட்டதற்கு, “அதற்குக் காரணம் மரபணுக்கள்தாம். இயல்பாகவே பெண்களுக்குக் கணக்கும் அறிவியலும் வராது” என்று பதில் சொல்லியிருக்கிறார்.

மில்ட்ரெட் கோன் என்கிற ஓர் உயிர்வேதியியலாளருக்கு 20 ஆண்டுகள் போராடிய பிறகே அவரது துறையில் வேலை கிடைத்தது. தலைமை ஆராய்ச்சியாளர் பெண் என்பதால் களப்பணிக்கு உதவ முடியாது என்று விலகிக்கொள்ளும் ஆண் உதவியாளர்கள் பலர் உண்டு



என்று எழுத்தாளர் அனிதா மணி குறிப்பிடுகிறார். தனது ஆராய்ச்சிக்காக லாஸ் அலமோஸ்/க்குச் சென்ற அணுவியலாளர் டார்லீன் ஹாஃப்மனை அங்கிருந்த மனித வளத்துறை உள்ளே அனுமதிக்கவேயில்லை. “ஒரு பெண் எப்படி வேதியியலாளராக இருக்க முடியும்? இதில் ஏதோ சந்தேகம் இருக்கிறது” என்கிற வாதத்தோடு அவரைப் பல நாட்கள் காக்கவைத்த பின்பே ஆராய்ச்சிக்கூடத்துக்குள் அனுமதித்தார்கள்.

செர்ன் என்கிற புகழ்பெற்ற அணு ஆராய்ச்சி மையத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். 1980களில் அங்கு நிலவிய சூழல் மிகவும் மோசமாக இருந்தது. அங்கே பணியாற்றிய மொத்த பெண் இயற்பியலாளர்களில் 10% மட்டுமே முழு ஊதியம் வழங்கப்பட்டது! மீதி இருக்கும் அத்தனை பேருக்கும் பாதி ஊதியமா என்று ஆச்சரியப்பட வேண்டாம். செர்ன் அதிகாரிகளுக்கு அவ்வளவு தாராள மனம் இருக்கவில்லை. பாக்கி இருக்கும் 90 விழுக்காட்டில் 4% பெண்களுக்குப் பாதி ஊதியம். அப்படியானால் மிச்சம் இருக்கும் 86% பெண்களுக்கு? ஊதியமே கிடையாது. இதற்கு செர்ன் வைத்திருந்த பதில்தான் அபத்தத்தின் உச்சம். இந்தப் பெண் அறிவியலாளர்களின் கணவர்கள் ஏற்கெனவே செர்ன் ஊழியர்களாம், அதனால் மனைவிகளுக்குத் தனியாக சம்பளம் தரத் தேவையில்லையாம். இந்தப் பிரச்னைகளை விரிவாக ஆராய்ந்துள்ளார் மேரி கைல்லார்ட் என்கிற இயற்பியலாளர்.

ஸ்டெம் துறையில் இருக்கும் மேலாளர்கள், பெண்களைவிட ஆண்களைத் தேர்ந்தெடுக்கவே விரும்புகிறார்கள், அதிகமாக ஆண்களுக்குத்தான் வாய்ப்பளிக்கிறார்கள் என்று 2015 இல் வந்த ஓர் ஆய்வுக்கட்டுரையில் உறுதிசெய்கிறார் ஸ்டமார்ஸ்கி கைலின். 2013 நிலவரப்படி, ஸ்டெம் துறைகளில் இருக்கும் பெண்களைவிட ஆண்களின் எண்ணிக்கை இருமடங்கு அதிகம் என்கிறார் ஆராய்ச்சியாளர் லாண்டிவர்.

2015ஆம் ஆண்டில் டிம் ஹண்ட் என்கிற ஓர் அறிவியலாளர் பெண் விஞ்ஞானிகளுக்கு எதிராகப் பேசிய சில கருத்துகள் இணையத்தில் பரவலாக விவாதிக்கப்பட்டன. அந்தச் சூழலில், பணியிடத்தில் தாங்கள் சந்தித்த பல பாகுபாடுகளைப் பெண் ஆராய்ச்சியாளர்கள் பகிர்ந்துகொண்டார்கள். மூத்த ஆராய்ச்சியாளர் ஒருவர், “இதன் செயல்முறையை நான் உனக்குச் சொல்லித்தரப் போவதில்லை. நீ கற்றுக்கொள்வாய், ஆனால் கல்யாணம் செய்துகொண்டு ஆய்வுக்கூடத்தை விட்டுப் போய்விடுவாய். உனக்கு சொல்லிக்கொடுத்தால் என் நேரம்தான் வீணாகும்” என்று தன்னிடம் சொன்னதாக ஒரு பெண் ஆராய்ச்சியாளர் வருத்தத்துடன் பதிவு செய்தார்.

பொறியியல் பட்டதாரிகளில் பெண்களைவிட ஆண்களுக்கே வேலை கிடைக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம் என்று தனது 2014ஆம் ஆண்டு ஆய்வுக்கட்டுரையில் கூறுகிறார் ப்ரதீப் சௌத்ரி. அதிலும் குறிப்பாக, ஒரு நிறுவனத்தில் தொழில்நுட்ப ரீதியான, உற்பத்தி ரீதியான பணியிடங்களில் ஆண்களும், ஆலோசனை, மேலாண்மை, நிதித்துறை போன்றவை சார்ந்த பணியிடங்களில் பெண்களும் அதிகமாகப் பணியமர்த்தப்படுகிறார்கள் என்று அவரது ஆய்வு தெரிவிக்கிறது. மாநிலத்தைப் பொறுத்து இந்த ஆய்வின் முடிவுகளில் சிற்சில வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால், இந்தியாவின் சராசரி இப்படித்தான் இருக்கிறது. பொறியியல் துறைகளைப் பொறுத்தவரை பெண்களுக்குக் கணிப்பொறி சார்ந்த துறைகளும் ஆண்களுக்கு மெக்கானிக்கல் போன்ற துறைகளும் பொருந்தும் என்கிற ஓர் எண்ணம் இந்திய சமூகத்தில் இருப்பதாகப் பதிவு செய்கிறார் நம்ரதா குப்தா.

“9-5 வேலைகள்தாம் பெண்களுக்குச் சரிப்பட்டுவரும், ஆண்கள்தாம் ஆராய்ச்சிக்குத் தகுதியானவர்கள்” என்பதும் ஒரு பொதுவான நம்பிக்கை. ஆராய்ச்சி சார்ந்த வேலை பெண்களுக்கு ஒத்துவராது என்கிற எண்ணம் பரவலாக இருக்கிறது. ஒரு சிறந்த அறிவியல் ஆராய்ச்சியாளர் என்பவர் நேரம் காலம் இல்லாமல் வேலை செய்தாக வேண்டும், எப்போது வேண்டுமானாலும் ஆராய்ச்சிக் கூடத்துக்கு வரத் தயாராக இருக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்பு இருக்கிறது. இதை “ஆயடந ஆழனநட ழக றுழசம” என்கிறார்கள். அறிவியலுக்கு அர்ப்பணிப்பு உணர்வு அவசியம்தான். ஆனால், ஆண்மைய சமூகக் கட்டமைப்பை வைத்துக்கொண்டு பெண் அறிவியலாளர்களும் அதேபோன்ற ஒரு வேலை வடிவத்துக்குள் இருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. குழந்தையைக் கவனிக்கவேண்டிய பொறுப்பும் வீட்டு வேலைகளும் பெண்களுக்குச் சுமையாக இருக்கின்றன. ஆகவே இந்த அமைப்புக்குள் இருந்துகொண்டு பெண்கள் வேலை செய்கிறார்கள் என்பதைப் பணியிடங்கள் உணரவேண்டும். அந்தச் சுமையைக் குறைக்க சமூகம் தயாராக இல்லை என்பதற்காக, பெண்களை வேலைக்கு அமர்த்துவதையே தவிர்ப்பது என்ன நியாயம்?

“இதில் மேலும் சில அம்சங்களைச் சேர்த்துப் பார்க்கவேண்டும்” என்று அறிவியல் எழுத்தாளர்கள் ஆஷிமா டோக்ராவும் நந்திதா ஜெயராஜ்/ம் வலியுறுத்துகிறார்கள். வேலைவாய்ப்பில் மதத்தையும் சாதியையும் சேர்த்தால் என்னவாகும் என்பதைக் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை தலித்தாக இருப்பவர்களின் வேலைவாய்ப்புக்கான சாத்தியக்கூறு 33% குறைவு என்றும், இஸ்லாமியராக இருந்துவிட்டால் வேலைவாய்ப்பு சாத்தியக்கூறு 66% குறைந்துவிடுகிறது என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். பெண் என்கிற பாலின அடையாளத்தோடு இதுபோன்ற அடையாளங்களும் வேலைவாய்ப்பில் குறுக்கிடுகின்றன.

(7ஆம் பக்கம் பார்க்க..)

# எலான் மஸ்க்குடனான மோதலுக்கு இடையில் டிரம்ப் மிகப்பெரிய குற்றவாளி': 'க்ராக்' வெளியிட்ட பதிவால் சர்ச்சை



அமெரிக்க அதிபர் டிரம்பின் நெருங்கிய நண்பரான பிரபல தொழிலதிபரும் 'க்ராக்' செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தலைவருமான எலான் மஸ்க் இடையே பிரச்னைகள் இருந்து வருகிறது. கேட்கும் தகவல்களை கொடுக்கும் 'க்ராக்' செயற்கை நுண்ணறிவு, சர்ச்சைக்குரிய பல தகவல்களை வெளியிட்டு பலமுறை சர்ச்சைகளில் சிக்கியுள்ளது. இந்த நிலையில், க்ராக் எக்ஸ் தளத்தில் தற்காலிகமாக முடக்கப்பட்டு, பின்னர் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தபோது, முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டு பெரும் குழப்பத்தை உண்டாக்கியது. தனது முடக்கம் குறித்த புகைப்படம் போலியானது என்றும், வெறுப்புணர்வைத் தூண்டும்வகையில் பதிவிட்டதால் முடக்கப்பட்டதாகவும், காசாவில் இஸ்ரேலும் அமெரிக்காவும் இனப்படுகொலை செய்வதாகக் கூறியதால் கணக்கு முடக்கப்பட்டதாகவும் வெவ்வேறு பதில்களை அளித்தது.

சமீபத்தில் அமெரிக்க அதிபர் டிரம், வாஷிங்டனில் குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டை மீறி சென்றுவிட்டதாக கூறியதோடு, நகர காவல்துறையை தேசிய அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து தேசிய பாதுகாப்புப் படையினரைக் களமிறக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார். இதுதொடர்பாக க்ராக்கிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு,

வாஷிங்டன் நகரின் 'மிகப்பெரிய குற்றவாளி' அதிபர் டொனால்ட் டிரம்ப் தான் என்று அறிவித்துள்ளது. வர்த்தகப் பதிவுகளில் முறைகேடு செய்ததற்காக நியூயார்க்கில் 34 குற்றச்சாட்டுகளில் டிரம்ப் தண்டனை பெற்றது, அவரை நகரின் மிக மோசமான குற்றவாளியாக ஆக்குகிறது என்று க்ராக் மீண்டும் மீண்டும் கூறியது. டிரம்ப்பிற்கும் மஸ்க்கிற்கும் இடையே அண்மையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்குப் பிறகு இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இறுதியில் எலான் மஸ்க், 'இந்த பதிவு முட்டாள்தனமான பிழை' என்றும், எக்ஸ் மற்றும் எக்ஸ்ஏஐ நிறுவனங்களுக்கு இடையேயான உள் புரிதலில் ஏற்பட்ட குழப்பமே இதற்குக் காரணம் என்றும் கூறி சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். (ஐ)

## இஸ்ரோ ஏவும் கனரக அமெரிக்க செயற்கைக்கோள்!




அண்மையில் 'நிசார்' செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது இஸ்ரோ. அடுத்து, அமெரிக்கா உருவாக்கிய, 6,500 கிலோ எடையுள்ள 'ப்ளூபேர்ட்' (BlueBird) செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த இஸ்ரோ தயாராகிறது.


அதிநவீன 'எல்.வி. எம்.3எம்5' ராக்கெட் மூலம் இந்தச் செயற்கைக்கோளை ஏவ இஸ்ரோ விஞ்ஞானிகள் தயாராகி வருகின்றனர். இதனால், சர்வதேச விண்வெளிச்சந்தையில் இஸ்ரோவின் நம்பகத்தன்மை அதிகரிக்கும்.

எந்தவொரு சிறப்பு கருவியும் இல்லாமல், சாதாரண மொபைல் போன்களுக்கு, செயற்கைக் கோளிலிருந்தே, நேரடியாக அதிவேக இணைய இணைப்பை வழங்குவதே இதன் தனிச்சிறப்பு.

'ப்ளூபேர்ட்' செயற்கைக் கோளில், புரட்சிகரமான தொழில்நுட்பம் உள்ளது. எந்தவொரு சிறப்பு கருவியும் இல்லாமல், சாதாரண மொபைல் போன்களுக்கு, செயற்கைக் கோளிலிருந்தே, நேரடியாக அதிவேக இணைய இணைப்பை வழங்குவதே இதன் தனிச்சிறப்பு. 'ப்ளூபேர்டின்' 64 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பிரமாண்டமான ஆன்டெனா, தொலைதூரக் கிராமங்களில் இருப்போரின் மொபைலுக்கும் நேரடியாக இணைய சேவையை வழங்கும்.

அமெரிக்காவின் இவ்வளவு பெரிய, முக்கியமான செயற்கைக்கோளை இஸ்ரோ ஏவுவது, இரு நாடுகளுக்கும் இடையேயான விண்வெளி ஒத்துழைப்பைப் வலுப்படுத்தும். இது இந்தியாவின் தொழில்நுட்ப ஆற்றலுக்கு ஒரு சான்றாக இருப்பதோடு, உலக விண்வெளித் தொழில்நுட்ப சந்தையில், இந்தியாவின் முக்கியத்துவத்தையும் உலகிற்கு உணர்த்துகிறது. (ஐ)

## 'மாஜி' அதிபரை தொடர்ந்து மனைவியும் சிறையில் அடைப்பு



தென் கொரியாவின் முன்னாள் அதிபர் யூன் சுக் இயோலின் மனைவி கிம் கியோன் ஹீ, லஞ்சம், பங்கு மோசடி மற்றும் செல்வாக்கை தவறாக பயன்படுத்தியது போன்ற குற்றச்சாட்டில் நேற்று சிறையில் அடைக்கப்பட்டார்.

கிழக்காசிய நாடான தென் கொரியாவில் கடந்தாண்டு டிச., 3ல் அப்போது அதிபராக இருந்த யூன் சுக் இயோல், ராணுவ அவசர நிலையை அறிவித்தார். எதிர்க்கட்சியினர் பார்லிமென்டை கூட்டி இதற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றினர்.

அதிபர் பதவியில் இருந்து இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவரது அவசரநிலை சட்டத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அரசுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டது, அதிகார துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுகளில் அவர் ஜனவரி 15ல் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் அவரது மனைவி மீது லஞ்சம் வாங்கியது, பங்குச் சந்தை மோசடி மற்றும் செல்வாக்கை தவறாக பயன்படுத்தியது போன்ற வழக்கு விசாரணை நடந்து வந்தது. அதில் ஆதாரங்களை கலைக்கும் ஆபத்து இருப்பதாக நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது.

இதையடுத்து, அவரையும் கைது செய்ய நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது. அதன்படி நேற்று அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு தனி சிறை, மேஜை, தரைவிரிப்பு ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

## கள்ளச்சாராயம் குடித்த இந்தியர்கள் 40 பேர் மருத்துவமனையில் அனுமதி

குவைத்தில் கள்ளச்சாராயம் குடித்து 40 இந்தியர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பத்தினருக்காக உதவி எண்களை இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

அரபு நாடுகளில் ஒன்றான குவைத்தில் மதுபானங்களுக்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், அல் /யூக் எனும் பகுதியில் விற்கப்பட்ட சட்டவிரோத மதுபானத்தை வாங்கி பலர் குடித்துள்ளனர். இதனால், ஏராளமானோர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 40 பேர் இந்தியர்கள் ஆவர். இதுவரையில் சிகிச்சை பலனின்றி இந்தியர்கள் உள்பட 10 வெளிநாட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த இந்திய தூதரக அதிகாரிகள் மருத்துவ மனைகளுக்கு நேரில் சென்று, பாதிக்கப்பட்டுள்ள இந்தியர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகின்றனர்.

இது குறித்து குவைத்துக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த சில தினங்களில் 40 இந்தியர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் உயிரிழந்தனர். ஒரு சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

குவைத் சுகாதார அமைச்சகத்தின் உதவியுடன் இந்தியர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய தூதரக அதிகாரிகளும் நிலைமையை கவனித்து வருகின்றனர்.

இந்தியர்களின் குடும்பத்தினர் தொடர்புகொள்ள 965-65501587 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். இந்தியர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறோம், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## அமெரிக்க போர் கப்பலை விரட்டியடித்தது சீனா

'தென் சீன கடலில் சீன எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்த அமெரிக்க போர்க் கப்பலை விரட்டியடித்தோம' என சீன ராணுவ அமைச்சகம் தெரிவித்தது. தென் சீன கடல், உலகின் மிக முக்கியமான கடல் வழித்தடங்களில் ஒன்று. ஆண்டுக்கு 24 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வர்த்தகம் இந்தப் பகுதி வழியாக நடைபெறுகிறது. தென் சீன கடலின் பெரும் பகுதிக்கு சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.

இங்கு உள்ள ஸ்கார்பரோ ஷோல் என்ற பகுதி, பிலிப்பைன்ஸ் நாட்டின் பிரத்யேக பொருளாதார மண்டலத்திற்கு உள்ளே அமைந்துள்ளது. ஆனாலும் சீனா இதை தங்கள் பகுதி என அறிவித்துள்ளது. இந்நிலையில், இந்த பகுதிக்குள் ரோந்து சென்ற அமெரிக்காவின் யு.எஸ்.எஸ்., ரால்ப் ஜான்சன் போர்க் கப்பலை விரட்டியடித்ததாக சீன ராணுவ அமைச்சகம் நேற்று தெரிவித்தது. இது குறித்து ராணுவ செய்தித் தொடர்பாளர் ஜியாங் பின் கூறுகையில், "இந்த நடவடிக்கைகள் சட்டப்படி மேற்கொள்ளப்பட்டவை. சீனாவின் இறையாண்மையை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கையை எடுத்தோம்," என்றார். (ஐ)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குண்டுவீச்சில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 150 இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## செஞ்சோலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

53 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேரினதும் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வான் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2006.08.14 ஆம் திகதியன்று வள்ளிபுனம் -இடைக்கட்டு பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் விமானத் தாக்குதல் இடம்பெற்ற நேரத்தில் இன்று இந்த நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி, அக வணக்கம் செலுத்தி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தபிசாளர் வே. கரிகாலன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர்களான சி.குகனேசன், க.தர்மலவன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன், தாயக நினைவேந்தல் அமைப்பின் தலைவர் முல்லை ஈசன் மற்றும் இளைஞர்கள், பொதுமக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலியைச் செலுத்தினர்.

## சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் இன்று முற்பகல் ஊர்காவற்றுறை, நாரந்தனைப் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருகையில்,

வழமை போன்று பகல் வீதி கண்காணிப்பு நடவக்கைகளுக்காக கொஸ்தாபசு ஹரிதாஸ் தலைமையிலான ஊர்காவற்றுறைப் பொலிஸ் அணியினர் நாராந்தனைப் பகுதியில் ஈடுபட்டிருந்த போது, வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவர் நடமாடியதை அவதானித்த பொலிஸார், அவரை மறித்து சோதித்த போது அவரது காற்சட்டை பொக்கற்றில் தாலிக்கொடி, சங்கிலி, மோதிரங்கள், பென்ரன்கள், இருந்ததை அவதானித்தனர்.

இதையடுத்து அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது அவை சுன்னாகம் பகுதியில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் எனத் தெரியவந்தது.

இதையடுத்துச் சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்று சோதனைகளை மேற்கொண்டபோது அங்கு பல நவீன கைத்தொலைபேசிகள், ஒரு தொகைப் பணம், இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட பல பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார், சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சந்தேகநபரையும் மீட்கப்பட்ட பெறுமதிமிக்க பொருட்களையும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஒப்படைத்தனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், பெறுமதிமிக்க நகைகள், பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதையடுத்து திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய விசாரணைகளில் பொலிஸார் தீவிரம் காட்டியுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## செஞ்சோலை படுகொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாயக மற்றும் புலம்பெயர் உறவுகளின் அனுசரணையில் தாய் தமிழ் பேரவையின் ஆதரவோடு சமூகச் செயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உயிரிழந்த உறவுகளுக்கு சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தபிசாளர் வே.கரிகாலன், தாய் தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.ரூபன், அரசியல் பிரமுகர்கள், கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள், செஞ்சோலையில் உயிரிழந்த பிள்ளைகளின் பெற்றோர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கு- கிழக்கு பூரண ஹர்த்தால்- கட்சி, மத பேதங்களை கடந்து ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் கோரிக்கை!

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுவதும் ஓகஸ்ட் 18ஆம் திகதி ஹர்த்தால் தினமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வர்த்தகர்கள், பொதுஅமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் இராணுவ பிரசன்னங்களை குறைக்க ஒரு வலுவான போராட்டமாக அமையும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே.கரிகாலன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் இன்றையதினம் பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தொடர்ச்சியாக இராணுவ பிரசன்னம் அதிகரித்து காணப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 18ஆம் திகதி ஹர்த்தால் தினமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

அதன்படி புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வர்த்தகர்கள், பொதுஅமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் எதிர்வரும் 18ம் திகதி திங்கட்கிழமை கதவடைப்பு போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் எங்களுடைய பிரதேசங்களில் இராணுவம் ஆக்கிரமித்து இருக்கின்ற இடங்களில் இருந்து அகன்று அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் இருக்க வேண்டும் என வலியுறுத்த முடியும். அத்துடன் சர்வேச நாடுகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் தங்களுடைய பிரதேசங்களில் இராணுவ பிரசன்னங்களை குறைக்க இது ஒரு வலுவான போராட்டமாக அமையும். அண்மையில் நடந்த புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட முத்தையன்கட்டு பகுதியில் இராணுவத்தினால் பிடிக்கப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் கொலை விடயம் இன்றுவரை மர்மமாகவே இருக்கின்றது.

அண்மையில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கூறியிருந்தார்,

ஆனால் கடந்த காலங்களில் 30 ஆண்டு காலமாக தமிழ் மக்கள் இராணுவத்தினராலும், அரச படைகளாலும் எங்களுடைய பிரதேசங்களில் ஆக்கிரமிக்கப்பட்டு பல வகையில் மக்களுக்கான துன்பியல் சம்பவங்களை கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதுவரைக்கும் அதற்கான நீதியான விசாரணைகள் எதுவும் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு நடந்ததாக தெரியவில்லை. அவ்வாறு இருக்கும்போது இராணுவ பிரசன்னமானது தொடர்ச்சியாக எங்களுடைய பகுதிகளில் இருந்து நீக்கப்பட வேண்டும்.

இந்த கர்த்தால் அனுஷ்டிப்பானது கட்சி பேதங்களை கடந்து, மத பேதங்களை கடந்து அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்- எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி செயகத்திற்கு முன்பாக விவசாயிகள் பாரிய போராட்டம்!

ஜனாதிபதி செயகத்திற்கு முன்பாக திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் பாரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருகோணமலையில் விவசாய நிலங்களை தனியார் நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்காக வன நிலங்களை ஆக்கிரமித்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முத்துநகர் பகுதியில் உள்ள 600 ஏக்கர் வயல் நிலம் இந்திய நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படுவதை நிறுத்த கோரியும், வன நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்பை தெரிவித்தும் திருகோணமலை முத்து நகர் விவசாயிகள், ஜன அரகலய இயக்கத்துடன் இணைந்து ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் இரண்டு வாரங்களுக்கு முன்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும், அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்கத் தவறிவிட்டதாக போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

போராட்டத்தின் போது மாணவர் செயற்பாட்டாளர்களான வசந்த முதலிகே மற்றும் லஹிரு வீரசேகர ஆகியோர், ஜனாதிபதி செயலகத்திற்கு வெளியே மூத்த பொலிஸ் அதிகாரியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அங்கு பதற்றமான சூழ்நிலை உருவாகியது.

இதனால் ஜனாதிபதி செயலகத்தின் ஒரு நுழைவாயில் தற்காலிகமாக மூடப்பட்டதுடன், போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக சிறப்பு அதிரடிப் படை வரவழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 42 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள பாரிய திருத்தப் பணிகள்!

இலங்கை நாடாளுமன்றத்தில் 42 ஆண்டுகளுக்குப் பின்னர் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையின் அனுமதிக்கு அமைவாக சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவின் அறிவுறுத்தலின்படி இலங்கை நாடாளுமன்றத்தில் பாரிய திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாடாளுமன்ற கட்டடத்தொகுதியின் கொன்கிரீட் மேல்தளம் (Roof Terrace) மீது காணப்படும் மண் அகற்றப்பட்டு, திருத்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அது மாத்திரமன்றி, கூரைகளின் பீலிகள் (சுழுழக புரவவநசள), செப்புக் கதவு (Copper Door), நாடாளுமன்ற வைத்திய நிலையம் (Parliament Medical Center), கழிவறைக் கட்டமைப்பு (Washrooms) மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அணி அறை என்பவற்றிலும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறு அளவிலான திருத்தப்பணிகள் மற்றும் பராமரிப்புக்கள் இணைப்புப் பொறியியல் திணைக்களத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருப்பினும், பாரிய அளவிலான திருத்த வேலைகள் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராமன் எத்தனை ராமனடி...

**Leaky Pipeline** என்று ஒரு கருத்தாக்கம் உண்டு. பத்து அடி கொண்ட ஒரு குழாய் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதில் இரண்டு அடிக்கு ஒருமுறை ஓர் ஓட்டை இருக்கிறது என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அதற்குள் தண்ணீரை ஊற்றினால், இரண்டு அடிக்கு ஒருமுறை தண்ணீரின் அளவு குறைந்துகொண்டே வரும், இல்லையா? அதிலும் குழாயின் இறுதிக்கு வந்துசேரும் நீர் மிகவும் குறைவாகத்தானே இருக்கும்? அறிவியல் துறையிலும் அதுதான் நடக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். அறிவியலில் பள்ளிப் படிப்பு இளங்கலை முதுகலை முனைவர் பட்டம் வேலை என்று ஒவ்வொரு நிலையிலும் பெண்களின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது என்று அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

1988இல் அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் முடிவுகளை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். அமெரிக்காவின் உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் பாட மாணவர்களில் 37% பெண்கள். பத்தாம் வகுப்புக்கு மேல் இந்த நிலை மாறிவிடுகிறது. அடுத்தகட்டமாக 22% மாணவியர் மட்டுமே அறிவியல் படிப்பில் நீடிக்கிறார்கள், மீதம் இருப்பவர்கள் வேறு பாடங்களை நோக்கிச் சென்றுவிடுகிறார்கள். கல்லூரியில் இதன் விழுக்காடு 15% மட்டுமே, அதாவது கல்லூரியில் அறிவியல் படிப்பவர்களில் 15% மட்டுமே பெண்கள். அடுத்தகட்டமாக அறிவியலில் முனைவர் பட்டம் பெறுபவர்களைக் கவனித்தால் அதில் 10% மட்டுமே பெண்கள். முனைவர் பட்டம் பெற்றுவிட்டு, துணை பேராசிரியராகப் பணியாற்றுபவர்களில் 7% மட்டுமே பெண்கள், அதற்கும் அப்பால் தேடிப் பார்த்தால் நிரந்தரப் பணியிடம் பெற்றுப் பேராசிரியராக இருப்பவர்களில் 3% மட்டுமே பெண்கள். இதைத்தான் ஒழுகும் குழாய் என்கிற உருவகம் சுட்டிக்காட்டுகிறது.

இன்னும் விவாதம் முடியவில்லை. அறிவியலைக் கற்றுத் தேர்ந்தபிறகு அதே துறையில் வேலை கிடைப்பதிலும் சரியாக வேலை செய்வதிலும் பெண்களுக்கு மேலும் பல பிரச்சினைகள் உண்டு.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2025 வெளியிடப்பெற்றது.